## எடப்பாடி பழனிசாமி, தோல்வியின் விளிம்பில் இருக்கிறார்!

# தி.மு.க. கூட்டணி 234 தொகுதிகளிலும் வெற்றிபெறும்!

## விராலிமலை – இலுப்பூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**புதுக்கோட்டை, ஏப். 13 -**

**கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன் தினம் விராலி மலை தொகுதி இலுப்பூரில் நடைபயிற்சி மேற்கொண்டு பொது மக்களிடம் வாக்குச் சேகரித்தார். அப்போது முதல்வர் அவர்கள் செய்தி யாளர்களுக்கு அளித்த பேட்டியில் "தி.மு.கழகக் கூட்டணி 234 தொகுதி களிலும் வெற்றிபெறும்" என்று உறுதிபடக் கூறினார்.**

"திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுக் கோட்டை மாவட்டம் விராலிமலை தொகுதி தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து இலுப்பூரில் நடைப்பயணம் மேற் கொண்டு வாக்கு சேகரித்தார்."

"பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். "தேநீர் கடைக்குச் சென்று தேநீர் அருந்திய முத லமைச்சர்" " அ.தி.மு.க.வை டெல்லியில் எடப்பாடி பழனிச்சாமி அடமானம் வைத் துள்ளார். அ.தி.மு.க. போன்ற கட்சிகள் டெல்லிக்கு அடிமையானது வேதனை அளிக்கிறது வெட்கப்படுகிறோம்" என்று கூறி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேட்டியளித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூரில் நேற்று முன்தினம் நான்காம் கட்ட பிரச்சாரத்தை தொடங்கிய நிலையில் நேற்று புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.

இந்த நிலையில் இலுப்பூரில் விராலி மலை தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே. கே.செல்லபாண்டியனை ஆதரித்து நேற்று நடைபயணம் மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார்.

இலுப்பூர் பெரிய கடைவீதியில் நடந்து சென்று பொதுமக்களை சந்தித்து முதல மைச்சர் வாக்கு சேகரித்தார். தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் அருகே நடந்து சென்று பொதுமக்கள் மற்றும் வியாபாரி களை சந்தித்து கலந்துரையாடினார், அதேபோல் சாலையில் சென்ற பேருந்து களில் பயணித்த பொதுமக்கள் முதல மைச்சரைக் கண்டு ஆரவாரம் செய்தனர்.

விராலிமலை சாலை இலுப்பூரில் உள்ள தேநீர் கடைக்குச் சென்று முதலமைச்சர் தேநீர் அருந்தினார். மேலும் விராலிமலை பிரதான சாலை அன்னவாசலில் நடந்து சென்று பொது மக்களை சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற் போக்குக் கூட்டணி கட்சியின் விராலி மலை வேட்பாளர் கே.கே.செல்லபாண்டி யனுக்காக வாக்குச் சேகரித்தார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறும்போது,

பா.ஜ.க.வைச் சேர்ந்த எத்தனை பேர் தமிழ்நாட்டிற்கு வந்தாலும் தி.மு.க. தலை மையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிதான் வெற்றி பெறும் என நம் பிக்கை தெரிவித்த முதலமைச்சர், பா.ஜ.க. என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை என்றார். மேலும் பேசிய அவர் எடப்பாடி தோல்வியின் விளிம்பில் இருக்கிறார் அதனால் பல விமர்சனங்களை வைப்ப தாகவும் அ.தி.மு.க.வை டெல்லியில் எடப்பாடி பழனிச்சாமி அடமானம் வைத் துள்ளதாகவும் அ.தி.மு.க.வை பா.ஜ.க. தான் நடத்தி வருவதாகவும் அ.தி.மு.க. போன்ற கட்சிகள் டெல்லிக்கு அடிமையா னது வேதனை அளிக்கிறது வெட்கப்படு கிறோம் என்றும் கூறினார்.

புதிய நடிகர் கட்சி தொடர்பான செய்தி யாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த முதலமைச்சர். **"யார் வந்தாலும் கவலை யில்லை; நாங்கள் எங்களுடைய வேலையை செய்து வருகிறோம், மக்கள் கொடுக்கக்கூடிய எழுச்சியை பார்க்கும் பொழுது 234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று தெரிவித் தார்".**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் வாக்கு சேகரித்தபோது பொதுமக்கள், இளைஞர்கள், பெண்கள் பெருந்திரளாகக் கூடி 'திராவிட மாடல்' அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களால் பெரிதும் பயனடைந் துள்ளோம். இந்த ஆட்சி மக்களுக்கான ஆட்சி, சுயமரியாதைமிக்க ஆட்சி, அனைவரையும் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழச் செய்கிற ஆட்சி. அதிலும் குறிப்பாக பெண்கள் தன்னம்பிக் கையுடன் பொருளாதாரத்தில் முன்னேற் றம் அடைந்து குடும்பச் சுமைகள் பெரிதும் குறைந்து மகிழ்ச்சியாக வாழ்வதாகத் தெரிவித்தார்கள். உங்கள் அறிவிப்புகள் அனைத்தும் வரவேற்கத்தக்கதாக உள்ள தாக தெரிவித்தனர். 2026 தி.மு.க. தேர் தல் அறிக்கை அனைவருக்கும் பயன் அளிப்பதாக அமைந்துள்ளது என்றும் மகிழ்ச்சி பொங்க தெரிவித்தனர். எங்கள் அனைவருடைய வாக்குகளும் தி.மு.க தலைமையிலான கூட்டணிக்கே என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெளிவாக கூறினார்கள்.



புதுக்கோட்டையில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.4.2026) புதுக்கோட்டையில், விச்சூர் பங்குத் தந்தை எஸ். ஆரோக்கியசாமி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கிறிஸ்துவப் பெருமக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தி வருவதற்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத் தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்துக் கொண்டனர்.



புதுக்கோட்டையில் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.4.2026) புதுக்கோட்டையில் காட்டுபாவா பள்ளிவாசல் ஜமாத் தலைவர் முகமது அலி ஜின்னா மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, இஸ்லாமியப் பெருமக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தி வருவதற்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத் தேர்தலில் கழகக் கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்துக் கொண்டனர்.



புதுக்கோட்டையில் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.4.2026) புதுக்கோட்டையில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க புதுக்கோட்டை மாநில மாவட்ட செயலாளர் செல்வராஜ், மாவட்ட குழு உறுப்பினர் ரத்தினம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, விவசாயப் பெருமக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காகவும், கழகத் தேர்தல் அறிக்கையில் புதிய அறிவிப்புகளை வெளியிட்டமைக்காகவும், சட்டமன்ற பொதுத் தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்துக் கொண்டனர்.

# தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு - புதுக்கோட்டையில் 40க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஆதரவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

**புதுக்கோட்டை, ஏப். 13-**

**தி.மு.க. தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று புதுக்கோட்டை யில் 40க்கும் மேற் பட்ட பல்வேறு அமைப்புகள் நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட் டணிக்கு தங்களுடைய முழு ஆத ரவு தெரிவித்தனர்.**

புதுக்கோட்டை செல்லக் கண்ணு நீலாவதி அறக்கட்டளை தலைவர் சி.மதியழகன், புதுக் கோட்டை மிளகாய் புளி மொத்த வியாபாரம் செய்து வரும் பி. கே.வி.பன்னீர் , புதுக்கோட்டை மலர் வணிகம் மற்றும் பேக்கரி தொழில் புரியும் ராஜேந்திரன், புதுக்கோட்டை ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை பொறியாளர் மற்றும் சிலட்டூர் நாட்டுத் தலைவர் .N.தங்கவேல், புதுக்கோட்டை புனித வியாகுல மாதா ஆலய பங் குத்தந்தை அமுல் வில்லியம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் மற்றும் நக் கீரர் தென்னை கூட்டுப்பண்ணை இயக்குநர் செல்வராசு. அறந் தாங்கி முகைதீன் ஆண்டவர் ஜமாத் தலைவர் எஸ்.என்.எஸ். சேக் அப்துல்லா, வணிக சங்கப் பேரவை மாநிலத் துணைத்தலை வர் காமராஜ், மாவட்ட உலாம சபை செயலாளர் ஜாபர் அலி, மண மேல்குடி ஆரோக்கியமாதா கோவில் பங்குத்தந்தை ஆரோக் கிய சாமி, விச்சூர் அமலோற்பவ மாதா கோவில் பங்குத்தந்தை ஆரோக்கியசாமி, அக்னி சிறகுகள் அறக்கட்டளை மற்றும் இரத்த தான குழுமம் நிறுவனர் சங்கர், மீமிசல் வர்த்தக சங்கத் தலைவர் மற்றும் ரகுமான் ஜுவல்லரி உரி மையாளர் அபூபக்கர், தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத், புதுக்கோட்டை மாவட்ட தலைவர் சித்திக் ரகு மான், புதுக்கோட்டை அகில இந் திய வ.உ.சி.பேரவை மாநில பொதுச் செயலாளர் லெணா லெட் சுமணன், புதுக்கோட்டை வெள் ளான் செட்டியார் சங்க மாநில பொதுசெயலாளர் ராமுக்கண்ணு, புதுக்கோட்டை மாவட்ட அரசு ஹாஜி சதக்கத்துல்லா, புதுக் கோட்டை நிஜாம் பாக்கு நிறுவன உரிமையாளர் சபியுல்லா, புதுக் கோட்டை சி.எஸ்.கே. பவுண்டே சன் நிறுவனர் சித்திரை செல்வகு மார், புதுக்கோட்டை மாவட்ட வர்த்தகர் சங்கத் தலைவர் சாகுல் ஹமீது, புதுக்கோட்டை பொன்பு துப்பட்டி பொன்னமராவதி,தொழி லதிபர் ஆதிகாலத்து அலங்கார மாளிகை ஜவுளிக்கடை உரிமை யாளர் மணிகண்டன், தொண் டைமான இச்சடி மன்னர் குடும்பத் தைச் சேர்ந்த விஜயகுமார், புதுக்கோட்டை சிப்காட் தொழில் அதிபர்கள் சங்க மாவட்டச் செயலா ளர் கோ.பெருமாள், புதுக்கோட்டை சிறு தொழில் அதிபர்கள் நல சங்க மாவட்டத் தலைவர் எஸ்.ராஜ்கு மார் போன்ற 40க்கும் மேற்பட்ட அமைப்புகள் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்க ளைச் நேற்று (11.4.2026) சந் தித்து தங்களுடைய முழு ஆத ரவை தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற அணிக்கு அளிப்ப தாக மகிழ்ச்சியுடன் தெரிவித்த னர்.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி 102 வது வட்டத்தில், கழக வெற்றி வேட்பாளர் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டனர். உடன் பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.பரமசிவம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணைச் செயலாளரும் அண்ணா நகர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளருமான வே.கௌதமன் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.